2000 ரூபாய் நோட்டின் செலவு 3 ரூபாய் 58 காசாக குறைந்தது: மத்திய அரசு தகவல்

டெல்லி, ஜூலை 10–

அச்சிடப்படும் புதிய ரூ.2,000 நோட்டு ஒன்றின் விலை 65 பைசா குறைந்துள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

2016ஆம் ஆண்டின் நவம்பர் மாதத்தில் பணமதிப்பழிப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட பிறகு புதிய வடிவிலான ரூ.2,000 நோட்டுகள் அச்சிடப்பட்டு மக்களின் புழக்கத்துக்கு விடப்பட்டது. இந்த நோட்டுகள் ரிசர்வ் வங்கியின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் பாரதிய ரிசர்வ் பேங்க் நோட் முத்ரன் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தால் மட்டுமே அச்சிடப்பட்டு வருகின்றன. இந்த நிறுவனம் அச்சிடும் ரூ.2000 நோட்டு ஒன்றுக்கு 2017 18 நிதியாண்டில் ரூ.4.18 விலை நிர்ணயிக்கப்பட்டது.

65 பைசா குறைந்தது

இந்நிலையில் 201819 நிதியாண்டில் இதன் விலை ரூ.3.53 ஆகக் குறைந்துள்ளது. அதாவது நோட்டு ஒன்றின் விலை 65 பைசா குறைந்துள்ளது. இந்த விவரங்களை ஜூலை 9ஆம் தேதி மாநிலங்களவையின் கேள்வி நேரத்தின்போது மத்திய நிதித் துறை இணையமைச்சரான அனுராக் தாகூர் வெளியிட்டார்.

ரூ.200 நோட்டுகளின் விலை குறித்த விவரங்களையும் அவர் தெரிவித்திருந்தார். 201718 ஆம் ஆண்டில் 200 ரூபாய் நோட்டு ஒன்றுக்கு ரூ.2.24 விலை நிர்ணயிக்கப்பட்ட நிலையில், 2018 19ஆம் ஆண்டில் அது ரூ.2.15 ஆகக் குறைந்துள்ளது.

பாரதிய ரிசர்வ் பேங்க் நோட் முத்ரன் பிரைவேட் லிமிடெட் நிறுவனம் அச்சிடும் நோட்டுகளுக்கு மட்டுமே இந்த விலை பொருந்தும்.

செக்யூரிட்டி பிரின்டிங் & மானிடரிங் கார்ப்பரேஷன் ஆஃப் இந்தியா லிமிடெட் நிறுவனமும் நோட்டுகளை அச்சிடுகிறது. இந்த நிறுவனத்தால் அச்சிடப்படும் 500 ரூபாய் நோட்டு ஒன்றின் விலை ரூ.3.37 ஆக உள்ளது.

ஜி.எஸ்.டி. வரியால் தமிழக அரசுக்கு கிடைத்த வருமானம் என்ன?

தி.மு.க. எம்.எல்.ஏ.வுக்கு ஓ.பன்னீர்செல்வம் விளக்கம்

சென்னை, ஜூலை.10

'ஜி.எஸ்.டி. வரியால் தமிழக அரசுக்கு கிடைத்த வருமானம் என்ன?' என்பது தொடர்பான தி.மு.க. எம்.எல்.ஏ.வின் கேள்விக்கு, ஓ.பன்னீர்செல்வம் விளக்கம் அளித்தார்.

தமிழக சட்டசபையில் நேற்று வணிக வரித்துறை மானிய கோரிக்கை மீதான விவாதத்தின்போது, தி.மு.க. எம்.எல்.ஏ. சேகரன் ஜி.எஸ்.டி. வரி குறித்த சில கேள்விகளை எழுப்பினார்.

இதற்கு பதில் அளித்து துணை முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் பேசியதாவது:

நாடு முழுவதும் 2017ம் ஆண்டு ஜூலை 1ந்தேதி முதல் ஜி.எஸ்.டி. வரி நடைமுறைப்படுத்தப்பட்டது. முந்தைய நிதி ஆண்டில் பெறப்பட்ட வரி வருவாயை காட்டிலும் 14 சதவீதம் வருவாய் வளர்ச்சியுடன், மாநில அரசின் வருவாயை காப்பதற்காக மத்திய அரசு இழப்பீட்டு தொகையை வழங்கி வருகிறது.

அதன்படி மத்திய அரசிடம் இருந்து 2017–18ம் ஆண்டில் இழப்பீடாக ரூ.632 கோடியும், 2018–19ம் ஆண்டில் ரூ.4 ஆயிரத்து 824 கோடியும் தமிழக அரசு பெற்றுள்ளது. மேலும் 2017–18ம் ஆண்டுக்கான இழப்பீட்டு நிலுவைத்தொகையாக ரூ.386 கோடியும், 2018–19ம் ஆண்டில் ரூ.553 கோடியும் நாம் பெற வேண்டியுள்ளது.

விகிதாச்சார அடிப்படையில்...

2017–18ம் ஆண்டு மார்ச் 31ந்தேதி வரை ஒருங்கிணைந்த ஜி.எஸ்.டி. வரியாக ரூ.1 லட்சத்து 76 ஆயிரத்து 688 கோடி மத்திய அரசால் பெறப்பட்டது. இத்தொகை மத்திய மற்றும் மாநில அரசுகள் இடையே 50:50 என்ற விகிதத்தில் பகிர்ந்து கொள்ளப்பட வேண்டும். அதன்படி 2017–18ம் ஆண்டில் அனைத்து மாநிலங்களுக்கும் பகிர்ந்தளிக்கப்பட வேண்டிய மொத்தத்தொகை ரூ.88 ஆயிரத்து 344 கோடி ஆகும்.

இதில் விகிதாச்சார அடிப்படையில் தமிழகத்துக்கு 2017–18ம் ஆண்டில் பகிர்ந்தளிக்கப்பட வேண்டிய மொத்தத்தொகை ரூ.6 ஆயிரத்து 582 கோடி ஆகும். இதில் மத்திய அரசிடம் இருந்து 2017–18ம் ஆண்டில் ரூ.1,304 கோடி மட்டுமே பெறப்பட்டது. மீதமுள்ள ரூ.4 ஆயிரத்து 458 கோடி 2017–18ம் ஆண்டின் நிலுவைத்தொகையாக பெற வேண்டியது உள்ளது.

நடப்பாண்டில் அதாவது 2018–19ம் ஆண்டில் மத்திய அரசால் ஒருங்கிணைந்த ஜி.எஸ்.டி. வரியாக பெறப்படும் தொகை, அவ்வப்போது மாநில அரசுக்கு பகிர்ந்தளிக்கப்படுகிறது. தற்போது வரை ரூ.4 ஆயிரத்து 842.82 கோடி தற்காலிக, இடைக்கால தொகையாகவும், ரூ.12 ஆயிரத்து 425.9 கோடி வழக்கமான தீர்வுத்தொகையாகவும் மத்திய அரசிடம் இருந்து தமிழக அரசு பெற்றுள்ளது.

இவ்வாறு ஓ.பன்னீர்செல்வம் பேசினார்.

துணை முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வத்தை தலைமைச் செயலகத்தில் கர்நாடக இசை பின்னனி பாடகி சுதா ரகுநாதன் நேரில் சந்தித்து தனது மகளின் திருமண அழைப்பிதழை வழங்கினார்.

தமிழகத்தில் இன்றும் மழைக்கு வாய்ப்பு: வானிலை ஆய்வு மையம் தகவல்

சென்னை, ஜூலை 10–

சென்னை உட்பட தமிழகத்தின் பல பகுதிகளில் நேற்று பரவலாக மழை பெய்த நிலையில், இன்றும் தமிழகத்தின் பல பகுதிகளில் மழை பெய்ய வாய்ப்பு உள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

தமிழகத்தின் பல பகுதிகளில் தண்ணீர் தட்டுப்பாடு நிலவி வரும் நிலையில், அரியலூர், சிவகங்கை, சென்னை உள்ளிட்ட பகுதிகளில் நேற்று பரவலாக மழை பெய்தது. இன்றும் மழை பெய்ய வாய்ப்பு உள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

கோடை காலம் முடிவடைந்து ஒன்றரை மாதங்களை கடந்த பின்னரும், தமிழகத்தின் பல பகுதிகளில் வெப்பத்தின் தாக்கம் குறைந்த பாடில்லை. சென்னை, திருச்சி உள்ளிட்ட பகுதிகளில் கடந்த வாரம் லேசாக மழை பெய்த நிலையில், மீண்டும் வெயிலின் தாக்கம் அதிகரிக்கத் தொடங்கியது.

இந்நிலையில், தமிழகத்தின் பல பகுதிகளில் நேற்று மாலை நேரத்திற்கு பின்னர் பரவலாக மழை பெய்து வருகிறது. கடலூர், விருத்தாசலம், நாகை, அரியலூர் ஆகிய மாவட்டங்களில் சுமார் 2 மணி நேரத்திற்கும் மேலாக கனமழை பெய்தது. சிவகங்கை மாவட்டத்தில் கோடை காலம் தொடங்கியதில் இருந்தே வெப்பத்தின் தாக்கம் அதிகமாக இருந்து வந்த நிலையில், நேற்று சிவகங்கை, காரைக்குடி, திருப்பத்தூர் ஆகிய பகுதிகளில் நல்ல மழை பெய்தது. சென்னையை பொருத்தளவில் கிண்டி, அண்ணா சாலை, பல்லாவரம், தாம்பரம், ஈக்காட்டுத்தாங்கல், தியாகராயா நகர் உள்ளிட்ட பகுதிகளில் பரவலாக மழை பெய்தது. இரவு நேரத்தில் குளிர்ந்த சூழல் நிலவியதால் பொதுமக்கள் மகிழ்ச்சி அடைந்தனர்.

இந்நிலையில், பருவமழை மற்றும் வெப்பச்சலனம் காரணமாக, தமிழகத்தின் ஓரிரு பகுதிகளில் இன்றும் மழை பெய்ய வாய்ப்பு உள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. அதன்படி, கன்னியாகுமரி, திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் கனமழைக்கு வாய்ப்பு உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐடிஎப்சி பர்ஸ்ட் பேங்க் லிமிடெட்

(முன்னர் ஐடிஎப்சி பேங்க் லிமிடெட்) CIN : L65110TN2014PLC097792
பதிவு அலுவலகம்: கேஆர்எம் டவர்ஸ், 8வது தளம், ஹாரிங்டன் ரோடு, சேத்துப்பட்டு, சென்னை–600 031. தொலைபேசி எண்: + 91 44 4564 4000. பேக்ஸ்: + 91 44 4564 4022

IDFC FIRST Bank

(கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002, பிரிவு 13(2)ன் கீழ் அறிவிப்பு)

கீழ்க்கண்ட கடன்தாரர்கள் மற்றும் உடன் கடன்தாரர்கள் **ஐடிஎப்சி பர்ஸ்ட் பேங்க் லிமிடெட்டிலிருந்து (முன்னர் ஐடிஎப்சி பேங்க் லிமிடெட்)** கீழ்க்குறிப்பிட்டுள்ள ஈடுபெற்ற கடன்களை பெற்றிருந்தனர். கீழ்க்குறிப்பிட்டுள்ள கடன்தாரர்கள் மற்றும் உடன் கடன்தாரர்கள் பெற்ற கடனுக்கு ஈடாக உரிய சொத்துக்கள் அடமானமாக பெறப்பட்டது. கடன் ஒப்பந்தங்களில் உள்ள விதிகள் மற்றும் நிபந்தனைகளை கடைபிடிக்க மற்றும் ஒழுங்காக திரும்ப செலுத்த அவர்கள் தவறிவிட்டனர். சிரர்வ் பேங்க் ஆப் இந்தியாவின் வழிகாட்டுதலின்படி அவர்களின் கடன்கள் என்பிஏ ஆக வகைப்படுத்தப்பட்டுள்ளது. அவர்கள் **ஐடிஎப்சி பர்ஸ்ட் பேங்க் லிமிடெட்டிற்கு (முன்னர் ஐடிஎப்சி பேங்க் லிமிடெட்)** கீழ்க்கண்ட அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ளபடி அனுப்பப்பட்டுள்ள அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள செலுத்த வேண்டிய பாக்கித் தொகை மற்றும் மேற்சொன்ன தொகையின் மீது அந்தந்த தேதிகளிலிருந்து ஒப்பந்தப்படியான மற்றும் பொருந்தக்கூடிய மேலும் வட்டி ஆகியவை கீழே அளிக்கப்பட்டுள்ளது.

வ. எண்	கடன் கணக்கு எண்.	கடன் வகை	கடன்தாரர்கள் பெயர்	13(2) அறிவிப்பு படி செலுத்த வேண்டிய தொகை	அறிவிப்பு தேதி	ஈடுபெற்ற ஆஸ்தி விவரங்கள்
1	5052341	வீட்டு கடன் LAP	1. பாவை டிரேடர்ஸ் 2. கல்யாணி G 3. V. கணேசன்	ரூ. 19,27,528.73	21/06/2019	வேலூர் மாவட்டம், வாலாஜா தாலுக்கா, வாலாஜா டவுன், பாவர்ண செட்டி தெரு, எண். 27–ஏ–ல் உள்ள நிலம், கட்டிடம் மற்றும் அதன் துண்டுகளும் பகுதிகளும். விஸ்தீரணம் 648 சதுர அடி நிலம்.டவுன் சர்வே எண். 972, வாலாஜா சார்பதிவு மாவட்டம், அரக்கோணம் பதிவு மாவட்டம். எல்லைகள்: கிழக்கில்: சாலம்மாளுக்கு சொந்தமான சொத்து மேற்கில்: தெரு, வடக்கில்: ஆச்சாரிக்கு சொந்தமான சொத்து, தெற்கில்: சிவாவுக்கு சொந்தமான சொத்து. அளவு: கிழக்கிலிருந்து மேற்காக 18 அடி, வடக்கிலிருந்து தெற்காக 36 அடி. பரப்பு 648 சதுர அடி நிலம் மற்றும் கட்டிடம்.

மேற்கண்ட அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பாக்கித்தொகை மற்றும் அந்தந்த தேதிகளிலிருந்து ஒப்பந்தப்படியான விகிதத்தில் வட்டி மற்றும் இதர கட்டணங்களை இந்த அறிவிப்பு வெளியான 60 நாட்களுக்குள் **ஐடிஎப்சி பர்ஸ்ட் பேங்க் லிமிடெட்டிற்கு (முன்னர் ஐடிஎப்சி பேங்க் லிமிடெட்)** செலுத்துமாறு நீங்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள். அவ்வாறு செலுத்த தவறும்பட்சத்தில் **ஐடிஎப்சி பர்ஸ்ட் பேங்க் லிமிடெட்டிற்கு (முன்னர் ஐடிஎப்சி பேங்க் லிமிடெட்)** செலுத்த வேண்டிய தொகையை பெறுவதற்கு குறிப்பிடப்பட்டுள்ள அடமான சொத்துக்களின் மீது கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002, பிரிவு 13(4) மற்றும் பிரிவு 14ன் கீழ் நடவடிக்கைகளை கீழ்க்கையொப்பமிட்டவர் மேற்கொள்வார். மேற்சொன்ன சட்டப்பிரிவு 13(13)ன்படி மேற்சொன்ன ஈடுபெற்ற ஆஸ்திகளை விற்றல்/குத்தகைக்கு விடுதல் அல்லது இதர வகையில் ஈடுபட உங்களுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது என்பதை அறியவும்.

தேதி : 10.07.2019
இடம்: வேலூர்

ஒப்பம்/– அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
ஐடிஎப்சி பர்ஸ்ட் பேங்க் லிமிடெட்
முன்னர் ஐடிஎப்சி பேங்க் லிமிடெட்

EIH அசோசியேட்டட் ஹோட்டல்ஸ் லிமிடெட்

தி ஒபராய் குழும உறுப்பினர்

பதிவு அலுவலகம்: 1/24, ஜி.எஸ்.டி ரோடு, மீனம்பாக்கம், சென்னை–600027.
வெப்சைட்: www.eihassociatedhotels.in
CIN: L92490TN1983PLC009903

அறிவிப்பு

இதன் மூலம் அறிவிக்கப்படுவதாவது:

(a) வருடாந்திர பொதுக்கூட்டம் பற்றிய அறிவிப்பில் கண்டுள்ள அலுவல்களை செயல்படுத்த கம்பெனியின் முப்பத்தாறாவது வருடாந்திர பொதுக்கூட்டம் **செவ்வாய்க்கிழமை, 30 ஜூலை, 2019 அன்று மாலை 3.30 மணிக்கு** டிரைடண்ட்,1/24,ஜி.எஸ்.டி.ரோடு, மீனம்பாக்கம், சென்னை–600 027ல் நடைபெறுகிறது. வருடாந்திர பொதுக்கூட்டம் பற்றிய அறிவிப்பு, வருகை சீட்டு, பதிலி படிவம் மற்றும் 31 மார்ச், 2019ல் முடிந்த நிதி ஆண்டுக்கான வருடாந்திர அறிக்கை ஆகியவை மின்னணு முறையிலும் சாதாரண முறையிலும் பதிவுத் தபால் மூலம் அனுப்பும் பணி 8 ஜூலை, 2019 அன்று முடிக்கப்பட்டுள்ளது. வருடாந்திர அறிக்கை, வருடாந்திர பொதுக்கூட்ட அறிவிப்பு, வருகை சீட்டு மற்றும் பதிலி படிவத்தை கம்பெனியின் வெப்சைட் www.eihassociatedhotels.inல் உள்ளது. மேற்சொன்ன ஆவணங்களை காகித வடிவில் பெற உறுப்பினர்கள் விரும்பினால், அவர்களின் பதிவு பெற்ற முகவரிக்கு இவை இலவசமாக அனுப்பி வைக்கப்படும். இதற்காக, isdho@oberoigroup.comக்கு DP ID–Client ID/Folio No. ஆகியவற்றை குறிப்பிட்டு இமெயில் அனுப்புமாறும் அல்லது கம்பெனி செயலாளர், 7, ஷாம் நாத் மார்க், டெல்லி–110 054 அவர்களுக்கு எழுத்துபூர்வமான கோரிக்கையை அனுப்புமாறும் உறுப்பினர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். மேற்சொன்ன ஆவணங்கள் NDSL இணையதளம் https://www.evoting.nsdl.comல் உள்ளது.

(b) கம்பெனிகள் சட்டம் 2013, பிரிவு 108 மற்றும் கம்பெனிகள் (மேலாண்மை மற்றும் நிர்வாகம்) விதிகள் 2014, விதி 20 மற்றும் செபி (பட்டியல் கட்டுப்பாடுகள் மற்றும் வெளியீடு தேவைகள்) விதிகள் 2015ன் விதி 44ன்படி, பொதுக்கூட்டத்தில் உறுப்பினர்கள் மின்னணு முறையில் வாக்களிப்பதற்காக தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு வசதி அளிக்கப்பட்டுள்ளது. அறிவிப்பில் உள்ள அனைத்து அலுவல் அயிட்டங்களின் மீது மின்னணு முறையில் உறுப்பினர்கள் வாக்குகளை பதிவு செய்வதற்காக நேஷனல் செக்யூரிடீஸ் டெபாசிட்டரி லிமிடெட்(''NSDL'') மூலமாக மின்னணு வாக்குப்பதிவிற்கு கம்பெனி ஏற்பாடு செய்துள்ளது.

(c) கூட்டத்தில் வாக்குச்சீட்டு மூலம் வாக்களிப்பதற்கான வசதி ஏற்படுத்தப்படும் மற்றும் கூட்டத்தில் ஆஜராகும் உறுப்பினர்கள் தொலைதூர மின்னணு வாக்குப்பதிவின் மூலம் ஏற்கனவே அவர்களின் வாக்குகளை பதிவு செய்யாமல் இருந்தால் அவர்களுக்கு கூட்டத்தில் வாக்களிக்கும் உரிமை உள்ளது. வாக்குச்சீட்டு முறையில் வாக்களிக்கும்போது, மின்னணு முறையில் வாக்குகளை பதிவு செய்த உறுப்பினர்கள் கூட்டத்தில் வாக்குச்சீட்டு மூலம் வாக்களிக்க முடியாது என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும். கம்பெனியின் செலுத்தப்பட்ட பங்கு மூலதனத்தில் வைத்துள்ள பங்குகள் விகிதத்தில் உறுப்பினர்களின் வாக்குரிமை இருக்கும்.

(d) கூட்டத்திற்கு முன்பாக மின்னணு முறையில் வாக்களித்த உறுப்பினர்கள், கூட்டத்தில் கலந்து கொள்ளலாம் ஆனால் மீண்டும் வாக்களிக்க உரிமை கிடையாது.

(e) கட் ஆப் தேதியான 22 ஜூலை, 2019 அன்று உறுப்பினர்/பயனுள்ள உரிமையாளர் (மின்னணு முறையில் பங்குகளை வைத்துள்ளவர்கள் விஷயத்தில்) பெயர்களில் பதிவு செய்துள்ள பங்குகளின் செலுத்தப்பட்ட மதிப்பு அடிப்படையில் வாக்களிக்கும் உரிமை கணக்கிடப்படும். கட் ஆப் தேதியான 22 ஜூலை, 2019 அன்று உறுப்பினர் பதிவேடு அல்லது டெபாசிட்டரிகளினால் பராமரிக்கப்படும் பயனுள்ள உரிமையாளர் பதிவேட்டில் பதிவாகி உள்ள பெயர்களில் உள்ள நபர் தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு/வாக்குச்சீட்டு மூலம் வாக்களிக்கும் வசதியை பெறலாம்.

(f) அறிவிப்பு அனுப்பிய பிறகு கம்பெனியின் பங்குகளை பெற்று கம்பெனியின் உறுப்பினர் ஆனவர் மற்றும் கட் ஆப் தேதியான 22 ஜூலை 2019 அன்று பங்குகளை வைத்துள்ளவர் அவர்களின் folio No./DP ID and Client ID குறிப்பிட்டு isdho@oberoigroup.com; evoting@nsdl.co.in or corporate@jurisprudentconsulting.com (''ஆராய்வாளர்'') அவர்களுக்கு இமெயில் அனுப்பி லாகிங் ஐடி மற்றும் பாஸ்வேர்டை பெற்றுக் கொள்ளலாம். எனினும் உறுப்பினர் தொலைதூர மின்னணு வாக்குப்பதிவிற்கு ஏற்கனவே NSDL–ல் பதிவு செய்திருந்தால், தற்போதைய உபயோக ஐடி மற்றும் பாஸ்வேர்டை பயன்படுத்தி அவர்கள் வாக்களிக்கலாம். ஒருவேளை உறுப்பினர் பாஸ்வேர்டை மறந்திருந்தால், www.evoting.nsdl.com–ல் உள்ள "Forget User Details/Password" என்ற ஆப்ஷனை பயன்படுத்தி உங்கள் பாஸ்வேர்டை மீட்டமைக்கலாம்.

(g) மின்னணு வாக்குப்பதிவு **27 ஜூலை 2019 (இந்திய நேரப்படி காலை 10.00 மணி)** தொடங்கி 3 நாட்கள் நடக்கும். மின்னணு வாக்குப்பதிவு **29 ஜூலை 2019 (இந்திய நேரப்படி மாலை 5.00 மணி) முடிவடைகிறது.** அதன் பிறகு மின்னணு வாக்குப்பதிவு NSDL–லினால் முடக்கப்படும். உறுப்பினர்கள் ஒரு தீர்மானத்தின் மீது வாக்களித்து விட்டால் பின்னர் அதனை மாற்ற முடியாது. மின்னணு வாக்குப்பதிவிற்கான விவரமான செயல்முறைகள்/அறிவுறுத்தல்கள் ஆகியவை வருடாந்திர பொதுக்கூட்ட அறிவிப்பில் உள்ளது. ஏதாவது சந்தேகம் அல்லது குறை இருப்பின் அது குறித்து பங்குதாரர்களுக்கான அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள் பிரிவை அணுகலாம் அல்லது https://www.evoting.nsdl.comல் படியிறக்க பிரிவில் உள்ள பங்குதாரர்களுக்கான தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு உபயோக கையேட்டை பார்வையிடலாம்.

(h) குறைகளை தீர்க்க அணுக வேண்டிய பொறுப்பான நபர் பற்றிய விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன:

i) வாக்குசீட்டு மூலம் ஓட்டுப்பதிவு:
திரு. தேஜஸ்வி தீட்சித்
உதவி கம்பெனி செயலாளர்
EIH லிமிடெட், கார்ப்பரேட் அலுவலகம்:
7, ஷாம் நாத் மார்க், டெல்லி–110 054.
இமெயில்: tejasvi.dixit@oberoigroup.com
தொலைபேசி: 011 23890505; பேக்ஸ்: 011 23890605

ii) மின்னணு வாக்குப்பதிவு:
திரு. அமித் விஷால்
நேஷனல் செக்யூரிடீஸ் டெபாசிட்டரி லிமிடெட் (NSDL)
டிரேட் வேர்ல்ட் – A விங், கமலா மில்ஸ் காம்பவுண்ட்
லோயர் பரேல், மும்பை–400 013
இமெயில்: amitv@nsdl.co.in போன்: 022 2499 4360

(i) சட்டப்பிரிவு 91, கம்பெனிகள் (மேலாண்மை மற்றும் நிர்வாகம்) விதிகள் 2014, விதி 10ன் மற்றும் பட்டியல் கட்டுப்பாடுகள் விதிகளின் விதி 42ன்படி வருடாந்திர பொதுக்கூட்டம் நடைபெறுவதையொட்டி கம்பெனியின் உறுப்பினர்கள் பதிவேடு மற்றும் பங்கு மாற்று புத்தகங்கள் செவ்வாய்க்கிழமை, 23 ஜூலை, 2019 முதல் வியாழக்கிழமை, 25 ஜூலை, 2019 முடிய (இரண்டு நாட்களும் சேர்த்து) மூடப்பட்டிருக்கும்.

EIH அசோசியேட்டட் ஹோட்டல்ஸ் லிமிடெட்டுக்காக
இந்த்ராணி ரே
கம்பெனி செயலாளர்

இடம்: கொல்கத்தா
தேதி : 8 ஜூலை, 2019

நூறாவது பிறந்தநாள் (11.07.2019)



டாக்டர்.நாவலர் **இரா.நெடுஞ்செழியன்**

தங்கள் நேர்மை. நாணயம். பொறுமை. உழைப்பு. கண்ணியம். அன்பு. ஆதரவு நினைவுகளுடன் வாழும் குடும்பத்தினர்

மகன் - இரா.நெ.மதிவாணன்
மருமகள் - டாக்டர் (திருமதி) கல்யாணி மதிவாணன்
பேத்தி - செல்வி சொப்னா மதிவாணன்
பேரன் - திரு.ஜீவன் நெடுஞ்செழியன்
திருமதி நேஹா ஜீவன்

GOVERNMENT OF TAMILNADU
THE DIRECTORATE OF MEDICAL AND RURAL HEALTH SERVICES
3rd floor, DMS Building, 359, Anna salai, Teynampet, Chennai -600006.
Phone No: 044-24355207. Website: www.tnhealth.org

NOTIFICATION No.01/DMS/2019 Date : 10.07.2019

The Director of Medical and Rural Health Services invites application for the post of Dental Surgeon on consolidated pay and on contract basis (Period of Contract: 11 months) under National Health Mission (NHM).

Sl. No.	Name of the post	No. of Vacancies	Consolidated Pay
1.	Dental Surgeon	100	Rs. 26,000/- p.m.

IMPORTANT DATES :

Date of Notification	10.07.2019
Last date for submission of application	31.07.2019/ 5.00pm

Candidates who wish to apply shall download the application from the website **www.tnhealth.org.**

Filled in application along with necessary certificates and documents must be sent through Speed post/Registered post to the above mentioned address.

For details regarding Age, Educational Qualification, General Information, Eligibility Conditions, Other Important Instructions etc., candidates must refer to the detailed notification in the website **www.tnhealth.org**

The detailed notification forms part of this notification.

Director of Medical and Rural Health Services, Chennai -6.

DIPR /720/ DISPLAY /2019

BEFORE THE DEBTS RECOVERY TRIBUNAL-III, Chennai
V Floor, Spencers Towers (Dewa Towers)
No.770-A, Anna Salai, Chennai-600 002
O.A. No. 199 of 2019

CANARA BANK - IFSC- CNRB0002874
NIOT Pallikaranai Branch
Represented by its Branch Manager
Velachery - Tambaram Road, NIOT Campus
Narayanapuram, Chennai-600 100
... APPLICANT

Vs

1.M/s.AM MINI SUPER MARKET
Represented by its Proprietor Mr.G.ANGAMUTHU
2.Mr.G.ANGAMUTHU, S/o.Shri.Gopal
3.Mrs.A.MALATHI, W/o.Mr.G.Angamuthu
....DEFENDANTS

1.M/s.AM MINI SUPER MARKET
Represented by its Proprietor Mr.G.ANGAMUTHU
No.439, Cheran Nagar, Sholinganallur,
(Global Hospital & Health City) Medavakkam Road
Perumbakkam, Chennai - 600 100

The above applicant has filed the Original Application in O.A.No.199 of 2019 against you for the recovery of a sum of Rs. Rs.Rs.81,72,885.15 together with subsequent interest. Please take notice to appear before the above said Hon'ble Tribunal on 06.08.2019 at 11.00 A.M. failing which the O.A. will be decided in your absence.

M.MUTHUKUMARAN
Counsel for the Applicant
No.14/12 (Old No.28/12),
Thirumurthy Street T.Nagar,
Chennai-600 017

தமிழ்நாடு அரசு
வாய்மையே வெல்லும்

சுதந்திரப் போராட்ட வீரர்

மாவீரன் அழகுமுத்துக்கோன் அவர்களின்

பிறந்த நாள்

நாள் :	நேரம் :	இடம் :
11.7.2019 வியாழக்கிழமை	காலை 9.00 மணி	எழும்பூர் இரயில் நிலையம் அருகில், சென்னை

தமிழ்நாடு அரசின் சார்பில் சுதந்திரப் போராட்ட வீரர்

மாவீரன் அழகுமுத்துக்கோன் அவர்களின்

திருவுருவச் சிலைக்கு

மாண்புமிகு துணை முதலமைச்சர்

திரு. **ஓ. பன்னீர்செல்வம்** அவர்கள்

மற்றும்

மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள்,

நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், வாரியத்தலைவர்கள், கூட்டுறவு சங்கங்களின் பிரதிநிதிகள் மற்றும் சீர்மிகு பெருமக்கள் மலர் தூவி மரியாதை செலுத்துவார்கள்

அனைவரும் வருக!

செ.ம.தொ.இ/723/வரைகலை/2019

இயக்குநர்
செய்தி-மக்கள் தொடர்புத்துறை,
சென்னை - 600 009.